I.A.No.2/2022 in HMOP.No.113/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –15.06.2024

எ.ம.சா.1– கார்த்திக்மாரிமுத்து த/பெ – முத்துக்குமார்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 5 முதல் 27 வரை கூறியுள்ள விபரங்கள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. பாரா 29 முதல் 31 வரையில் கூறியுள்ள விபரங்கள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. மனுதாரர் தன்னுடைய மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ள விபரங்கள் தான் உண்மை என்றால் சரியல்ல. மனுதாருக்கு உரிய ஜீவனாம்சம், இடைக்கால பராமரிப்பு தொகை கிடைக்கக்கூடாது என்பதற்காக நிரூபண வாக்குமூலத்தில் தவறான விபரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரை நானும், என் குடும்பத்தாரும் கொடுமைப்படுத்தியதால் எங்களை விட்டு தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாருக்கு தன்னை தானே பராமரிக்க வழியில்லை என்பதால் ஜீவனாம்சம் பெற தகுதி உள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் தற்சமயம் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, மனுதாரர் சுயமாக வேலை பார்த்து வருகிறார். அவருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதற்கு எங்களுக்கு வசதியும், தகுதியும் உள்ளது என்றால் சரிதான். மனுதாரின் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப ஜீவனாம்ச தொகையை மனுவில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. மனு விசாரணையின் போது இருதரப்பினரும் அவர்களது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய

விபரங்களை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சில முக்கிய பகுதிகள், மற்றும் விபரங்கள் விட்டுவிட்டதாக மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதில் புதிதாக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய இரண்டு பிரமாண வாக்குமூலங்களையும் தயார் செய்ய ஆடிட்டர் உதவி செய்தார் என்றால் சரிதான். எனது ஆடிட்டர் வருமான வரித்துறை சம்மந்தமான படிவங்களை இணையதளத்தில் பார்வையிட்டு மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை தயார் செய்ய எனக்கு உதவி செய்தார். எனது வங்கி கணக்கு விபரங்களையும், சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய அபிடவிட்டுடன் ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் சரிதான். 09.12.2022 ம் தேதியிட்டு சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய முதல் அபிடவிட்டை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய அபிடவிட்டை நான் உச்சநீதிமன்ற வேறு வழக்கில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தயார் செய்தேன். அபிடவிட் I பத்தியில் 1 முதல் 7 இனங்கள் பற்றிய விபரங்களை பூர்த்தி செய்யவில்லை என்று ஆட்சேபணை செய்தார்கள் என்றால் சரியல்ல. முழுமையாக தயார் செய்யப்படவில்லை என்று ஆட்சேபணை செய்தார்கள். உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் அபிடவிட்டில் I பத்தியில் 1 முதல் 7 இனங்கள் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் தாக்கல் செய்த எனது அபிடவிட்டில் மேற்படி 1 முதல் 7

இனங்கள் இல்லை என்றால் சரிதான், ஆனால் அவை எனக்கு பொருந்ததால் பொதுவாக Nil என்று குறிப்பிட்டேன். எனது வருமானம் மேற்படி இனங்களில் அதிகமாக இருந்ததால் Nil என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அபிடவிட்டின் இறுதி பகுதியில் உறுதிமொழி பத்தி உள்ளது என்றால் சரிதான், அதில் நான் தெரிவித்துள்ள வருமானம், செலவினங்கள், சொத்து மற்றும் கடன் அனைத்து வழிகளிலும் கிடைத்த விபரங்களை தெரிவித்துள்ளேன் என்றும், மேற்படி விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் நீதிமன்றத்திற்கு உடனடியாக தெரிவிப்பேன் என்றும், மேற்படி அபிடவிட்டில் தவறான விபரங்கள் இருக்கும்பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி உறுதிமொழி நிபந்தனையை நான் மீறி விட்டதாக மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.5/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்தரவிற்கு பின்னர் I பத்தியில் 1 முதல் 7 இனங்கள் தனித்தனியாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இரண்டாவது அபிடவிட்டில் I பத்தியில் 1 முதல் 7 இனங்களில் 3TANDAI INDIA PVT LTD –ல் நான் பணிபுரிவதால் மற்ற கம்பெனிகளில் நான் நிர்வாகத்தில் இல்லாததாலும், வருமானம் இல்லை என்பதாலும் அவ்வாறு கூறியுள்ளேன். மேற்படி இரண்டாவது அபிடவிட்டில் I பத்தியில் 1 முதல் 7 இனங்களில் கூறியுள்ள உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. அபிடவிட்டில் A காலத்தில் வீட்டு வாடகைக்காக மாதம் ரூ.23,000/– கொடுத்தற்கு ரசீது தாக்கல் செய்துள்ளானா என்றால் வங்கி மூலமாக பணம்

செலுத்தியதற்கும், அது தவிர Form –16 ல் சொல்லியுள்ளேன். அவற்றை இம்மனுவில் நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வீட்டு வாடகை கொடுக்காததால் தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.வீட்டு உபயோக செலவு, போக்குவரத்து செலவு, ஆயுட்காப்பீட்டு செலவு ஆகியவற்றிக்கு உரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் தான் தற்போது வரை எனது தாயாருக்கு மருத்துவ சிகிச்சைகள் அளித்து பராமரித்து வருகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சம்பள பணத்தில் இருந்து ரொக்கமாக அவ்வப்போது ரூ.25,000/– தொகையை எனது தாயாரின் மருத்துவ உதவிக்கு செலவு செய்து வருகிறேன் என்றும், நான் பணிபுரியும் தனியார் நிறுவனத்தில் இருந்து கிடைக்கும் மாத ஊதியத்தினை எனது உணவு, உடை, இருப்பிட செலவுக்கும் மற்றும் எனது தாயாரின் உணவு, உடை, இருப்பிடம், மற்றம் தொடர் மருத்துவ உதவிகளுக்கும் செலவு செய்து பராமரித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான், நான் தற்போது பெங்களூரில் பணிபுரிவதால் எனது தாயார் சிகிச்சைக்காக பெங்களூர் வரும் வரை அப்போது ஏற்படுகிற உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ செலவிற்கு நான் செலவு செய்த்ததை சொல்லியுள்ளேன். அந்த நிரூபண வாக்குமூலத்தில் எனது தாயார் பெங்களூருக்கு வரும் போது செலவு செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்காக அவ்வாறு செலவு செய்யமுடியும் என்றால் மனுதாரர் கோரியுள்ள தொகையை என்னால் ஜீவனாம்சம் கொடுக்க வசதி உள்ளது என்றால் சரியல்ல.

சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய பிரமாண வாக்குமூலத்தில் பாரா D ல் எனது தாயாரை என்னை சார்ந்து இருப்பவராக நான் காண்பிக்கவில்லை என்றும், அதனால் நான் சொல்லும் செலவு விபரங்களை எனது செலவினமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாருக்கு தனியாக வருமானம் வருவதால் அவரை என்னை சார்ந்து இருப்பவராக நான் காண்பிக்கவில்லை. எனது தாயாருக்கு தனியாக வருமானம் வருவதால் நான் கூறிய செலவினங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய பிரமாண வாக்குமூலம் தயார் செய்யும் போது 3TANDAI INDIA PVT LTD பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த நிறுவனத்தில் இருந்து எனது பணி பொறுப்பு, நிகர வருமானம் அடங்கிய சான்றிதழ்களை இணைக்க வேண்டும் என்று பாரா F இனம் 5ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நான் அந்த சான்றிதழை தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள ஆவண பட்டியலில் மேற்படி ஆவணங்கள் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் எனது சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டுடன் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. Form–16 படிவமும் நிரூபண வாக்குமூலத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் எனது சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டுடன் தாக்கல் செய்துள்ளேன். பாரா 6ல் எனக்கு வழங்கப்படும் சம்பளம் தவிர நிகர சலுகை தொகைகள் பற்றிய விபரங்களை தெரிவிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் மேற்படி விபரங்களை நான் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றும், படிவம் 16ல் பார்த்து கொள்ளும்படி சொல்லியுள்ளேன். எனது வருமான வரி படிவங்களை நிரூபண வாக்குமூலத்தில் ஆவணமாக காட்டவில்லை , ஆனால் எனது சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய அபிடவிட்டுடன் தாக்கல் செய்துள்ளேன். இதர வழிகள் மூலம் கிடைத்த வட்டி, மூலதன லாபம், வாடகை வருமானம், விவசாய மற்றும் வியாபார வருமானம், தபால் அலுவலக வைப்பீடு வருமானம் ஆகியவற்றை தெரிவிக்குமாறு பாரா 8ல் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால்சரிதான். அதில் நான் எனக்கு பொருந்தாதது என்று தெரிவித்தும் வாடகை ரூ.23,324/– கிடைப்பதாகவும், அந்த தொகையை எனது தாயாரின் வங்கி கணக்கில் மாற்றுவதற்கு குடும்ப ஏற்பாட்டின் படி அனுப்பி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வட்டி மூலம் சுமார் ரூ.1,000/– கிடைக்கும் என்று சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிடும் போது எனது வருமான வரி கணக்கீட்டு படிவம் மற்றும் வங்கி கணக்குகளையும் பார்வையிட்டேன். மனுதாரர் எனது வருமான வரி படிவங்களை நீதிமன்றம் மூலமாக வரவழைத்த விபரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.2 2019–2020ம் நிதி ஆண்டுக்கான நான் சமர்ப்பித்த வருமான வரி படிவம் என்றால் சரிதான். அதில் பக்கம் 40ல் வட்டி மற்றும் லாபம் மூலம் கிடைத்த தொகை ரூ.52,837/– என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இனத்தில் சேமிப்பு கணக்கு மூலம்கிடைத்த வட்டி, நிரந்தர வைப்பீட்டு தொகைக்கான வட்டி, மற்றும் வருமான வரித்துறையில் இருந்து கிடைத்த Refund தொகை ஆகியவற்றை சேர்த்து மொத்தம் ரூ.52,837/– ஆக

காட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.3 நிதியாண்டு 2020–2021ற்குரிய வருமான வருமான வரி படிவம் என்றால் சரிதான். அதில் பக்கம் 41ல் பத்தி 7ல் இதர இனங்கள் மூலம் கிடைத்த வருமானமாக ரூ.29,356/– என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.4 நிதியாண்டு 2021–2022ற்குரிய வருமான வருமான வரி படிவம் என்றால் சரிதான். அதில் பக்கம் 68ல் இதர இனங்கள் மூலம் கிடைத்த வருமானமாக ரூ.24,871/– என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 இனங்களிலான வருமானத்தை என்னுடைய சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் காட்டவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான விபரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ–4ல் எனக்கு வீடு மூலம் கிடைத்த வருமானம் ரூ.1,55,409/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.3ல் பக்கம் 60ல் வீடு மூலம் எனக்கு கிடைத்த வருமானம் ரூ.2,16,257/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரங்களை என்னுடைய சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் காட்டவில்லை என்றால் சரியல்ல, F பத்தியில் 8 வது இனத்தில் மேற்படி தொகையை மாதம் மாதம் எனது தாயாருக்கு குடும்ப ஏற்பாட்டின் படி அனுப்பி வைப்பதாக சொல்லியுள்ளேன். எனது தாயாருக்கு மேற்படி தொகையை அனுப்பியது குறித்து நான் பராமரித்து வரும் கணக்கு பேரேட்டில் குறிப்பிட்டுள்ளேன். எனது தாயாருக்கு மேற்படி தாயாருக்கு அனுப்பியதாக சா.சா.ஆ.2 முதல் சா.சா.ஆ.4 வரை தெரியவராது என்றால் சரிதான். மேற்படி தொகை எனக்கு கிடைத்த தொகை என்பதால் தான்

வருமான வரி படிவங்களில் தெரிவித்து வருமான வரி கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, என் தாயாரின் சொத்துக்களில் இருந்து அந்த வருமானம் வந்ததால் அதை வசூலித்து எனது தாயாருக்கு கொடுத்துவிடுகிறேன். மேற்படி வருமானம் ரத்து செய்யமுடியாத வாடகை ஒப்பந்தம் மூலம் வந்ததால் அவ்வாறு நான் என் தாயாருக்கு அனுப்பி வைத்தேன். நான் என் தாயாருக்கு அனுப்பி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் என் தாயாருக்கு கிடைத்த சொத்துக்கள் மூலம் கிடைத்த மாத வாடகையை தான் நான் என் தாயாருக்கு மேற்படி குடும்ப ஏற்பாட்டின் படி எனது தாயாருக்கு அனுப்பி வைத்தேன். எனக்கு தனியாக சொத்து குடும்ப ஏற்பாட்டின் படி கிடைக்கவில்லை. துாத்துக்குடி நகர், கிரேட்காட்டன் ரோடு, கதவு எண்.19, 19A, 19B, 19C ஆகிய சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. வருமான வரித்துறையில் சமர்பித்த படிவத்தில் மேற்படி கட்டிடத்தில் வாடகை மூலம் கிடைத்த தொகையை எனது வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வாடகை ஒப்பந்த படி மேற்படி சொத்துக்களில் நான் உரிமையாளராக காட்டப்படவில்லை என்றால் காட்டப்பட்டது, ஆனால் குடும்ப ஏற்பாட்டின் படி மேற்படி சொத்துக்கள் எனது தாயார் பெயரில் உள்ளதால் அந்த வருமானத்தை எனது தாயாருக்கு கொடுத்து விடுவேன். எனது தாயார் பெயரில் சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்கள் அனைத்தும் பூர்வீகமாக எனது தகப்பனாருக்கு கிடைத்து நாங்கள் எங்கள் தாயாருக்கு எழுதிக்கொடுத்துவிட்டோம். அது எங்கள் தாயாரின் சுயசம்பாத்திய சொத்து இல்லை என்றால் சரிதான், பூர்வீக சொத்து. ldல்

பத்தி–2ல் தனி மற்றும் கூட்டு வியாபாரம், HUF, கூட்டுக்குடும்ப வியாபாரம் ஆகியவற்றில் கிடைத்த வருமானம் பற்றி தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவை எனக்கு பொருந்தாதது என்று கூறியுள்ளேன். சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் G காலத்தில் திருமண உறவு ஊர்ஜீதத்தில் இருந்த காலத்தில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சம்மந்தமாக நான் வேறு நபருக்கு எழுதிக்கொடுத்த உரிமை மாற்ற பத்திரங்கள் பற்றி தெரிவித்து அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாரா 2ல் திருமணத்திற்கு பின்னர் கூட்டுக்குடும்பத்தில் தரப்பினருக்கு பங்கு விபரம், கூட்டாக அனுபவம் செய்து வரும் விபரம் ஆகியவற்றை தெரிவிக்க இனம் 2 மற்றும் 3ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி விபரங்கள் எனக்கு பொருந்ததாது என்று சொத்து மற்றும் பொறுப்பு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். 19, 19A, 19B, 19C ஆகியவற்றின் மூலம் கிடைத்த வருமானங்களை நான் வேண்டுமென்றே மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள ரத்து செய்யக்கூடிய வாடகை ஒப்பந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. நான் கூறியுள்ள குடும்ப ஏற்பாட்டு ஆவணம் எ.ம.சா.ஆ1 ஆகும். நான் வாடகையை வாங்கி எனது தாயாருக்கு அனுப்புவது சம்மந்தமாக எ.ம.சா.ஆ.1ல் இல்லை, ஆனால் வங்கி கணக்கில் உள்ளது. பாரா 8ல் கூறாததால் நான் உண்மையான விபரங்களை மறைத்து சொத்து மற்றும் பொறுப்பு அபிடவிட்டில் பட்டியலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1ன் படி நானும்,எனது சகோதரும் எனது தாயாருக்கு பூர்விக சொத்துக்களில் எங்களது பாகத்தை பொறுத்து தானமாக

எழுதிக்கொடுத்த பத்திரத்தில் சொத்துக்களின் மதிப்பாக ரூ.50 லட்சமாக காட்டியுள்ளேன் என்றால் 2016ன் ஆண்டில் உள்ள மதிப்பை நாங்கள் குறிப்பிட்டுள்ளோம், தற்சமயம் மேற்படி சொத்துக்களின் மதிப்பு பல கோடி என்று சொன்னால் என்னால் சொல்ல இயலாது. என் சகோதரர் வாடகை மூலம் கிடைக்கக்கூடிய சுமார் மாதம் ரூ.23,000/–த்தை என் தாயாருக்கு அவர் கொடுப்பார். எனது தாயாருக்கு சொந்தமான வீடுகளின் மூலம் வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்று எனக்கு தெரியாது. அது போக மருத்துவ செலவுக்கு பெங்களூருக்கு வரும் போது நான் தருவேன். மேற்படி வாடகை வருமானங்களை தவிர என் தாயாருக்கு வேறு வருமானம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எங்கள் குடும்ப வாழ்க்கை வசதிகளை விட மனுதாரரின் குடும்ப வாழ்க்கை வசதிகள் கூடுதலா என்றால் சரிதான். எனது தாயாருக்கு மாதந்தோறும் ரூ.46,000/– தேவைப்படுவதால் என் மனைவிக்கு அதை கூடுதலாக ஜீவனாம்சம் தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்து மற்றும் பொறுப்பு அபிடவிட்டில் F பாராவில் இனம் 8ல் Share மூலம் கிடைக்கும் வருமானங்களை பற்றியும், அதற்கான TDS விபரங்களை தெரிவிக்குமாறு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு அவ்வாறு நிறுவனங்களில் பங்குகள் உள்ளதா என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ள பங்குகளில் அவர் இறந்துவிட்டதால் அவரது சட்டப்படியான வாரிசு என்ற முறையில் எனக்கும் உள்ளது. அந்த நிறுவனங்களில் பங்குதாரர்கள் பெயர் பட்டியலில் எனது பெயர் உள்ளது என்றால் நான் மேற்குறிப்பிட்ட முறையில் உள்ளது. நான் MEM என்ற நிறுவனத்தில் 2020ம் ஆண்டுவாக்கில் பணிபுரிந்தேன். அந்த நிறுவனத்தில் எனக்கு பங்குகள்

உள்ளது. அந்த நிறுவனத்தில் எனக்கு பங்குகள் உள்ளதா என்ற விபரத்தை எனது சொத்து மற்றும் பொறுப்பு அபிடவிட்டில் சொல்லவில்லை என்றால் அது தாக்கல் செய்யும் நேரத்தில் எனக்கு அதில் பங்குகள் இல்லை. 2021–2022 ம் வரிவிதிப்பு ஆண்டில் மூலதன மதிப்பு ரூ.2397010/– இருப்பதாக சா.சா.ஆ.4 ல் பக்கம் 57 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பங்குகளின் மூலம் எனக்கு ஆண்டு வருமானமாக ரூ.4348/– கிடைத்ததாக சா.சா.ஆ.4 ல் கூறப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தில் என் பங்கு லாபவிகிதாசாரம் வகையில் 33.33 சதவீதமாக சா.சா.ஆ.4 ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு நான் தாக்கல் செய்த வருமான வரிபடிவங்களில் மேற்படி விபரங்கள் காட்டப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரிதான், ஆனால் மேற்படி நிறுவனம் நஷ்டத்தில் செயல்பட்டு வருவதாலும், மற்றும் 3TANDAI INDIA PVT LTD கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டதாலும் மேற்படி நிறுவனத்தில் தற்சமயம் என் பெயரில் பங்குமூலம் காட்டப்படாது. நான் மேற்படி நிறுவனத்தில் தொடர்ந்து பங்குதாரராக இருந்து வருகிறேன் என்றும், அதன் மூலம் எனக்கு கிடைக்கும் லாபத்தையும், பங்கு மூலதனத்தையும் மறைத்து பொய்யாக சொத்து மற்றும் பொறுப்பு அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. M.V.முத்துராஜன், M.V.சிவராமன், M.V.லட்சுமணன் மற்றும் M.V.சுப்பிரமணியம் ஆகியோர்கள் எனது தகப்பனாரின் பெரியாப்பா மகன்கள் என்றால் சரிதான். கூட்டுக்குடும்பத்திற்கு சொந்தமான சொத்துக்களை மேற்படியார்கள் நிர்வகித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரரின் வாரிசுகள் மற்றும் நாங்கள் பங்குதாரர்களாக உள்ள நிறுவனங்களில் என்

பெயரில் பதிவாகி உள்ள பங்குகளின் விபரங்களை கொண்டுவர மனுதாரர் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன்படி மேற்படி ம.சா.2 நீதிமன்றத்தில் ஆஜராகி பங்கு விபர பட்டியலை தாக்க்லசெய்த விபரம் தெரியும் என்றால் மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஆஜர் செய்துள்ளார், நிர்வாகிகள் ஆஜராகவில்லை. நிர்வாகிகள் ம.சா.2 க்கு மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்ய அதிகார கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஒரு நிர்வாகி மட்டும் கையொப்பம் செய்தார், மற்றவர்கள் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கையொப்பம் செய்யவில்லை. மேற்படி சாட்சி பட்டியலில் A.V.M மாரிமுத்து நாடார் சன்ஸ் பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்தில் என் பெயரில் 117771/− பங்குகள் உள்ளதாகவும் பங்கு மதிப்பு ரூ.1177710 என்றும் M.எடிசன் அன்ட் கம்பெனி பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்தில் என் பெயரில் 1152 பங்குகள் உள்ளதாகவும், அதன் மதிப்பு ரூ.1152000/− என்றும் மற்றும் AVMM Associates Pvt Ltd என்ற நிறுவனத்தில் என் பெயரில்  1316 பங்குகள் உள்ளதாகவும் அதன் மதிப்பு 131600/− என்றும் மாரிஸ் அசோசியேட்ஸ் பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்தில் என் பெயரில் 1393 பங்குகள் உள்ளதாகவும் அதன் மதிப்பு 1393000/− என்றும் சொன்னால் சரிதான்,  எனது தகப்பனார் பெயரில் உள்ள பங்குகளில் அவர் இறந்துவிட்டதால் அவரது சட்டப்படியான வாரிசு என்ற முறையில் எனக்கும் உள்ளது. இன்றைய தேதியில் அந்த பங்குகள் வாரிசுதாரர் என்ற முறையில் எனது பெயரில் தான் உள்ளது. மேற்படி பங்கு பட்டியலில் G பாராவில் இனம் 3 ல் பூர்வீக சொத்துக்களில் உள்ள என் பங்குகள் பற்றிய விபரங்கள் சொல்லப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான், ஆனால்

அந்த பங்குகள் இன்னும் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்யாததால் அந்த பங்குகள் பற்றி குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. எனது தகப்பனாருக்கு மேற்படி நிறுவனங்களில் பங்குகள் இருந்த விபரம் தெரியும், ஆனால் குறிப்பிட்டு எவ்வளவு பங்குகள் உள்ளது என்ற விபரம் தெரியாது. பாரா Fல் காலம் 8ல் TDS பற்றிய விபரங்களை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, TDS யையும் சேர்த்து வாடகை வருமானமாக ரூ.23,000/—என்று குறிப்பிட்டுள்ளேன், TDS என்று தனித்து காட்டப்படவில்லை. சா.சா.ஆ. 2 முதல் சா.சா.ஆ.4 ஆவணங்களில் TDS தொகைகளை தனியாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் சொத்து மற்றும் பொறுப்பு அபிடவிட்டில் பொய்யான விஷயங்களையும், உண்மையான விபரங்களை மறைத்தும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது குற்ற நடவடிக்கை எடுக்க இ.ம.எண்.5/2023 தாக்கல் செய்தது சரிதான் என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு முதல் எனக்கு 5 வங்கி கணக்குகள் இருந்தது, அதில் ஒரு வங்கி கணக்கை நான் முடித்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.5ல் 31.12.2021ல் தூத்துக்குடி, MV சுப்பிரமணியன் அண்ட் பிரதர்ஸ் என்ற நிறுவனத்தில் இருந்து ரூ.1655142/— எனது வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே தேதியில் AVM Associates என்ற நிறுவனத்தில் இருந்து எனது வங்கி கணக்கிற்கு ரூ.7,12,319/— மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த தொகை எனது தகப்பனாருக்கு அந்த நிறுவனத்தில் செக்யூரிட்டியாக கொடுக்கப்பட்ட எனது தகப்பனாரின் பணமாகும். மேற்படி இரு நிறுவனங்களிலும் இருந்து வந்த மேற்படி தொகைகளானது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில்

எனது தகப்பனார் பெயரில் இருந்த பங்குகளை எனது தகப்பனாரின் பங்காளிகள் மோசடி செய்து நாங்கள் கொடுத்த வழக்கில் உயர்நீதிமன்ற கிளையில் நடந்த சமரச பேச்சுவார்த்தையின் போது எனது பங்காளிகள் கொடுத்த காசோலைகள் என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை நான் பெற்றுக்கொண்டதாக உயர்நீதிமன்றத்தில் கையொப்பம் செய்து மெமோ தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தொகையை என் தகப்பனார் எனது கல்விக்காக வாங்கிய கடனுக்காக Sri Harithanam Energy Pvt Ltd நிறுவனத்திற்கு செலுத்திவிட்டேன். அந்த நிறுவனத்தில் எனது தாய்மாமன் சந்திரமோகன் என்பவர் பங்குதாரர் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது கல்விக்காக ரூ.23 லட்சம் கடனாக எனது தாய்மாமனிடம் பெற்றார். அந்த தொகையை எனது தகப்பனார் ரொக்கமாகவோ, வங்கி மூலமாகவோ பெற்றரா என்று எனக்கு தெரியாது. 09.02.2022 ம் தேதி AVM மாரிமுத்து நாடார் அன்ட் சனஸ் நிறுவனத்தில் இருந்து ரூ.138198/- எனது வங்கி கணக்கில்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே நாளில் மாரீஸ் பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்தில் இருந்து ரூ. 133115/-எனது வங்கி கணக்கில்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 11.02.2022 ம் தேதி Sri Harithanam Energy Pvt Ltd நிறுவனத்திற்கு ரூ.4,00,000/- எனது வங்கி கணக்கில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், என் தகப்பனார் எனது கல்விக்காக வாங்கிய கடனுக்காக செலுத்தப்பட்டது. எனது தகப்பனார் எனக்காக கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், எனக்கும் மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் என் பெயரில் எந்த தொகையும் இருக்கக்கூடாது என்று எனது தாயாரும், தாய்மாமாவும் கொடுத்த

ஆலோசனையின் பேரில் பணம் மாற்றம் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அசையா சொத்துக்கள் மீதும் மனுதாரர் நடவடிக்கை எடுத்துவிடக்கூடாது என்பதற்காக அதை என் தாயார் ஆலோசனையின் பேரில் மாற்றி கொண்டோம் என்றால் சரியல்ல, 2016ம் ஆண்டில் எ.ம.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது. எ.ம.சா.ஆ.1ல் கூறப்பட்டுள்ள சொத்துக்களுக்கு வாடகை வருமானத்தை என் தாயாருக்கு அனுப்புவது சம்மந்தமாக ஏற்பாடு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்ட பிறகு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மனைவி ஜனவரி, 2021ல் என்னை விட்டு பிரிந்து சென்றார். அதன் பிறகு எனது மனைவி காவல் அதிகாரியிடம் புகார் கொடுத்து விசாரணை செய்தார்கள். 2021ம் ஆண்டுவாக்கில் எனக்கும், மனுதாருக்கும் இடையே ஒத்திசைவு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது. நான் ஆஜராகவில்லை என்பதால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மனுவில் வாய்தாவிற்கு நான் ஆஜராகவில்லை என்ற விபரம் அந்த மனுவின் உத்தரவுகளை பார்த்தால் தெரியவரும் என்று சொன்னால் சரிதான், அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது மேலும் பல புகார்கள் காவல்நிலையத்தில் என் மீது கொடுத்தார்கள். ஒத்திசைவு விவாகரத்திற்கு நான் ஒப்புக்கொண்டு என் வழக்கறிஞருடன் கையொப்பம் செய்துவிட்டு நிர்ணயித்த தேதியில் வரவில்லை என்பதாலும், மனுதாரரின் சகோதரர் மீது என் தாயார் கொடுத்த குற்ற வழக்கை ரத்து செய்ய மதுரை உயர்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்யவரவில்லை என்பதாலும், ஏற்கனவே காவல்நிலையத்தில் பேசி முடித்ததால் என் மீதும், என் தாயார் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

மனுப்படி நான் ஜீவனாம்சம் மற்றும் வழக்கு செலவுத்தொகை கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.